திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. கு.அசோக்குமார், பி.காம்.,

****

ந.க. எண்: 0468/2025/எப்1 **ம.அ.எண்:** 02/2025/எப்1 நாள்: 19.06.2025.

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - திருமங்கலம் நகராட்சி - இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட செங்குளம், திருமங்கலம், சர்வே எண்: 116/5 part சர்வே வார்டு - A, பிளாக்- 10, T.S. No: 6/2 B3 மனையின் மொத்தப் பரப்பளவு 3366.00 ச.மீ. (83.17 செண்டு) பரப்பளவுள்ள இடத்திற்கு குடியிருப்பு மனைப் பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி வரப்பெற்றது - மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை: 1)திரு.டி.செல்வம், த/பெ.தனிக்கொடி, 57/3, பழனியாபுரம், திருமங்கலம், மதுரை மாவட்டம் அவர்களது விண்ணப்பம் நாள்:25.03.2025.

2)உதவி இயக்குநர், மதுரை மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்:40735/2025/SWP-25ABXGJZ/2025/TCP, நாள்.: 21.03.2025.

3)சாலையிடம் தானப்பத்திர ஆவண எண்.9252/2024, உள்ளாட்சி உபயோக இடம் தானப்பத்திர ஆவண எண் : 1755/2025, தமிழ்நாடு மின் உற்பத்தி தானப் பத்திர ஆவண எண் : 1754/2025.

4) இதே எண்ணிட்ட இவ்வலுவலக அறிவிப்பு நாள்: 01.04.2025

5) இந்நகர் மன்றத் தீர்மான எண்: 843, நாள்: 27.05.2025.

****

உத்தரவு :

திருமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மறவன்குளம், திருமங்கலம், சர்வே எண்: 116/5 part சர்வே வார்டு - A, பிளாக்- 10, T.S. No: 6/2 B3 மனையின் மொத்தப் பரப்பளவு 3366.00 ச.மீ. (83.17 செண்டு) பரப்பளவுள்ள இடத்திற்கு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு பார்வை 1-ல் காணும் விபரப்படி மனுதாரரால் விண்ணப்பிக்கப்பட்டது. மேற்படி விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் இடமானது ஆய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து, பார்வை 2-ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் கடிதத்தின் படி மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ந.க.எண்:40735/2025/SWP-25ABXGJZ/2025/TCP, நாள்:21.03.2025, மனைப்பிரிவு வரைபட எண்: ம.வ/ம.உ.தி.கு.எண்: 87/2025, திட்ட அனுமதி எண்: 101/2025, நாள்: 21.03.2025 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் விபரப்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விபரம்	பரப்பளவு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	3366 ச.மீ. (83.17 செண்டு)
ஒதுக்கிய மனைகள் (1 முதல் 17 வரை)	16 மனைகள்
பொது ஒதுக்கீடு	
மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு (மூலை முடக்குகள் உட்பட்ட)	702.05 ச.மீ
உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு தானமாக ஒப்படைக்கப்-பட்டது.	19.42 ச.மீ (0.72%)
தமிழ்நாடு மின் உற்பத்தி ஒதுக்கீடு	19.03 ச.மீ (0.71%)

மேற்குறிப்பிட்டுள்ளவாறு மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கான இடங்கள் போன்றவை மனுதாரரால், தானப்பத்திர ஆவண எண்: 1755/2025, நாள்: 06.03.2025 மற்றும் ரோடு இனாம் ஆவண எண்.9252/2024, நாள்:28.11.2024இன்படி இந்நகராட்சிக்கு தானமாகவும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோகத்திற்கான (TANGEDCO) இடமும் தானப்பத்திர ஆவண எண்: 1754, நாள்: 06.03.2025-இன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் இந்நகராட்சி அறிவிப்பின் படி மனைப் பிரிவிற்கான கட்டணங்கள் (கூராய்வு கட்டணங்கள்- ரூ. 16,000/-, உட்பிரிவு கட்டணம்- ரூ.5050/-, இறுதி அனுமதிக்கான கட்டணம்- ரூ.4,000/-, குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு ரூ.40000/- செலுத்திய ரசீது எண்: 117/MIS/01/25-26/0000613, நாள்: 14.06.2025 மற்றும் வைப்புத் தொகை கட்டணம் ரூ.84000/- கொடிநாள் நிதி ரூ.500/- கட்டணம் செலுத்திய ரசீது எண்: 117/MIS/01/25-26/0000614, நாள்: 14.06.2025ல் செலுத்தப்பட்டுள்ளது மற்றும் காலிமனைவரி (மனைகளின் பரப்பளவிற்கு ஏற்ப) வருவாய் பிரிவிற்கு குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பார்வை 4ல் காணும் நகர்மன்றத் தீர்மான எண்.843, நாள்: 27.05.2025இன்படி மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் வரப்பெற்ற தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இம்மனைப்பிரிவுக்கு **அங்கீகாரம்** வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்
திருமங்கலம் நகராட்சி

19/06/2025

பெறுநர்
திரு.டி.செல்வம்,
த/பெ.தனிக்கொடி,
57/3, பழனியாபுரம்,
திருமங்கலம், மதுரை மாவட்டம்

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம்

நகல் :-

1) உதவி இயக்குநர், மதுரை மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், மதுரை.
2) சார் பதிவாளர் அவர்கள், சார் பதிவாளர் அலுவலகம், திருமங்கலம்
3) நகர்சார் ஆய்வாளர் / நகரமைப்பு ஆய்வாளர் தொடர் நடவடிக்கைக்காக
4) நகராட்சி பொறியாளர் அடிப்படை வசதிகள் பராமரிப்பிற்கு.